**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

## மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2009ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27ம் நாள் வெள்ளி கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் : “புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூறும் ஆக்கம் தரும் ”**

**பொருள் :** காணாவிடத்துப் பிறரைப்பற்றிப் புறங்கூறிப் பொய்யாக உடல் தாங்கி உயிர் வாழ்தலைக் காட்டிலும் மடிந்து ஒழிந்து போவது அறநூல் கூறும் ஆக்கம் எல்லாம் தரும்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன், தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு. எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம். வாக்கு. செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று. இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும். பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன், இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்,

(அரசாணை (நிலை) எண்,245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.3/01051/2009

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2) ன்படி 13.11.2009-ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண்.812**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) சி.டபிள்யு.3/16627/2009**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2) ன்படி 19.11.20009 ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மாமன்ற தீர்மானம் எண்.813
பதிவு செய்யப்பட்டது.

**3) மந2/9156/07**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தெற்கு மண்டலம் வார்டு 37–ல் அமைந்துள்ள மைய காய்கறி அங்காடியை (சென்ட்ரல் மார்க்கெட்) சுத்தம் செய்வதற்கு 01.10.2009 முதல் 30.09.2010 முடிய உள்ள காலங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில், 15 தினக்கூலி ஊழியர்கள் (மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கும் தினச்சம்பளம் அடிப்படையில்) சப்ளை செய்வதற்கு டெண்டர் வரவழைக்கப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளியளித்த "பியூட்டி" (Bright Environment Awareness Unit Trust of Youth Voluntary Organisation Madurai – 16) நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு
.

மாமன்ற தீர்மானம் எண்.814
குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.

**4) மநி 1/31287/09**

மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் / தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) கோவை திரு.எஸ்.சிவராசு, அவர்களை பணி மாறுதலில் மதுரை மாநகராட்சி துணை ஆணையாளராக பணியமர்த்தி வெளியிடப்பட்டுள்ள அரசாணை நிலை எண் : 4185 பொது (சிறப்பு) துறை நாள்: 31.10.09–னை மாமன்ற தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு: திரு. எஸ். சிவராசு, துணை ஆணையாளராக 05.11.2009 முற்பகல் முதல் பணியேற்றுள்ளார்.

மாமன்ற தீர்மானம் எண்.815
பதிவு செய்யப்பட்டது.

**5) மநி 1/42939/07**

தமிழ்நாடு மின்சார வாரிய கடிதம் எண்: 08587/55/G14/G141/2008/3 நாள்: 14.09.2008ன் படி மதுரை மாநகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு பணிக்கென அனுமதிக்கப்பட்ட நான்கு உதவி மின்பொறியாளர் பணி இடங்களுக்கு அயற்பணியில் ஓராண்டு பணிபுரிய பட்டியலில் கண்ட அலுவலர்களுக்கு மாமன்ற தீர்மான எண்.646 நாள்: 27.01.2009-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி | பணியேற்றுள்ள மண்டலம் | அயற்பணிக்காலம் முடிவடையும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராமச்சந்திரன் உதவி மின்பொறியாளர் | வடக்கு மண்டலம் | 04.11.2009 பிற்பகல் |
| 2 | திரு.வி.முத்துக்கிருஷ்ணன் உதவி மின்பொறியாளர் | தெற்கு மண்டலம் | 18.11.2009 பிற்பகல் |
| 3 | திரு.கே.ஜி.சாந்தாராம் உதவி மின்பொறியாளர் | கிழக்கு மண்டலம் | 07.12.2009 பிற்பகல் |
| 4 | திரு.ஆர்.குமார், உதவி மின்பொறியாளர் | மேற்கு மண்டலம் | 11.12.2009 பிற்பகல் |

மேற்படி நான்கு உதவி மின்பொறியாளர்களுக்கும் அயற்பணியின் கீழ் பணிபுரியும் அனுமதி காலம் நடப்பாண்டிற்குள் முடிவடைவதால் மேற்படி அலுவலர்களின் பணித்திறனை கருத்தில் கொண்டும் நிர்வாக நலன் கருதியும் மேலும் இரண்டாண்டிற்கு அயற்பணியில் தொடர்ந்து பணிபுரிய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

மாமன்ற தீர்மானம் எண்.816
அயற்பணியில் தொடர்ந்து பணிபுரிய தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடிதம் வைக்க குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.

**6) Jn.S.2 / 21020 / 08**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெறும் அவனியாபுரம் 125 MLD கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சக்கிமங்கலம் 45.7 MLD கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சிவில், மெக்கானிக்கல் மற்றும் எலக்ட்ரிக்கல் பணிகள் மற்றும் அதனை சார்ந்த இயந்திரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து தரம் மற்றும் அளவுகளை ஒப்பந்த விதிகளின்படி உறுதி செய்து, தேவைப்படும் அறிவுரைகள் வழங்கும் மூன்றாம் நபர் தொழில்நுட்ப ஆலோசகராக நியமிப்பதற்கு, திருச்சி, நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி என்ற மத்திய அரசின் பொறியியல் கல்லூரி சம்மதித்து, அதற்காக ஆலோசனை கட்டணமாக ரூ.15.00/- இலட்சம் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு 28.10.09ம் தேதிய கூட்டப் பொருள் வைக்கப்பட்டது. மாமன்ற தீர்மானம் எண். 795ன்படி மீண்டும் மறுபரிசீலனை பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்க வேண்டியது என தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட பணியானது மிக அவசியமாகும். புதிய தொழில் நுட்பத்துடன் செயல்படுத்துவதால் மூன்றாம் நபர் தொழில் நுட்ப ஆலோசகர் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட கல்வி நிறுவனம் மத்திய அரசுக்கு சொந்தமானதாகும். இந்தியாவிலேயே சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும். எனவே மேற்கண்ட நிறுவனத்தினை மூன்றாம் நபர் தொழில்நுட்ப ஆலோசகராக நியமிக்கவும் அதற்கு ஆகும் கட்டணத் தொகை ரூ.15.00/- இலட்சத்தினை செலுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்.817</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**7 ) ந.பொ. 1/28904/09**

வைகை நதி மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் குருவிக்காரன் சாலை பாலம் முதல் அண்ணா நகர் பாலம் வரை வைகையாற்றின் இடது புற கரையில் வெள்ளத் தடுப்பு கரை ஏற்படுத்தி அலை கற்கள் பதித்து தார் சாலை அமைப்பது சம்மந்தமான 34 மதிப்பீட்டு பணிகளை ரூ.162.00 இலட்சத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மானம் எண். 354, நாள்: 31.01.07 மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ் கூடுதலாக தலா ரூ5.00 இலட்ச மதிப்பீட்டில் மூன்று மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்வதற்கு திட்டத்தின் இன்றியமையாமையை கருத்தில் கொண்டு மூன்று மதிப்பீட்டு பணிகளையும் மேற்கொள்வதற்கு நிர்வாக ஒப்புதல் மாநகராட்சியால் வழங்கப்பட்டது இவ்வாறு ரூ.177.00 இலட்ச மதிப்பீட்டு தொகையில் பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்படும் வைகை நதி சீரமைப்பு திட்ட பணிக்கு மநாகராட்சியால் ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ **66.00** இலட்சத்தில் மாநகராட்சியால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட 37 பணிகளில் 13 பணிகளுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது. எஞ்சியுள்ள 24 பணிகளை 2008–09 ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலை விகித அடிப்படையில் திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.155.00 இலட்சத்தில் 31 பணிகளை பொதுப்பணித்துறையினர் மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மானம் எண்.655 நாள் 27.01.09. ன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம் மதிப்பீட்டு பணிக்காக இதுவரை மாநகராட்சியால் ரூ.28.00 இலட்சம் பொதுப்பணித்துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை ந.பொ.1/21231/06 ஏட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது வைகை நதி சீரமைப்பு திட்டத்தின் கீழ் வைகை வடகரை பகுதியை ஒட்டி அமைந்துள்ள ஜட்கா தோப்பு முதல் குருவிக்காரன் சாலை பாலம் சந்திப்பு வரையுள்ள 180 மீ நீளத்திற்கு சாலை அமைப்பதற்கு ரூ.75.00 லட்ச மதிப்பீட்டில் 15 பணிகளாக மேற்கொள்ளும் வகையில் பொதுப்பணித்துறையினரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வைகை நதி சீரமைப்பு திட்டத்தின் அத்தியாவசியத்தின், எதிர்கால பயனையும் கருத்தில்கொண்டு வைகை ஆற்றின் இடதுபுறம் கரையோரம் அமைந்துள்ள ஜட்கா தோப்பு முதல் குருவிக்காரன் சாலை பாலம் வரை தார் சாலை அமைக்கும் பணியை தலா ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டு தொகை அடிப்படையில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு 15 பணிகளை ரூ.75.00 இலட்ச மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையினர் மேற்கொள்ளவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்.818</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**8 ) ந.பொ. 1/00193/09**

அரசாணை எண்.235, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்:27.11.08-ன் மூலம் அனுமதிக்கப்பட்ட தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தை (Tamil nadu Urban Roads Infrastructure Project) செயல்படுத்துவதற்கும், இத்திட்டத்தின் மூலம் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவுற்ற பகுதிகளில் சாலைகளை மேம்படுத்துவதற்கும் மாமன்ற தீர்மானம் எண்.656, நாள்: 27.01.09.–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.189, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்:12.10.09 -ன் மூலம் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் (TURIF) கீழ் தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு நிதி (Tamil nadu Road Infrastructure Fund - TURIF ) உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இத்திட்டப் பணிக்காக வடிவம், மேற்பார்வை மற்றும் மேலாண்மைக்கான ஆலோசகர் (DSM Consultants, Design, Supervision Management) நியமிப்பது சம்பந்தமாக தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி மற்றும் சேவை கழகத்தின் (TNUIFSL) முதன்மை செயல் அலுவலரை தலைவராகவும் மற்றும் 6 உறுப்பினர்களை உள்ளடக்கிய Tender Award Committee ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இக்கமிட்டியினால் நியமிக்கப்படும் ஆலோசகரால் நகர சாலை திட்டம் ( City Road Plan ) தயார் செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி நிறவனங்களிடம் சமர்பிக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வுத்தரவின் அடிப்படையில் நிதி மேலாளர், தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு நிதி அவர்களின் கடிதம் எண்.TURITF/LOI/Package 6/09, நாள்.21.10.09.-ன் மூலம் மதுரை நகராட்சிக்கு நகர சாலை திட்டம் (1337 Lane Kms) தயாரித்து சமர்பிக்கும் படி M/s. Feedback Ventures (P) Ltd., Gurgaon நிறுவனத்திற்கு நிபந்தனைகளின் அடிப்படையில் வேலை உத்தரவு (Letter of Intent ) வழங்கப்பட்டுள்ளது.

இவ்வேலை உத்தரவில், ஆய்வு எல்லையில் (Terms of Reference ) தெரிவித்த படியும் மற்றும் TNUIFSL/TURIF ன் மூலம் அவ்வப்போது தெரிவிக்கும் நிகழ்வுகளின் படியும் பணியை நிறைவேற்ற வேண்டும் என்றும், இப்பணி சம்மந்தமாக TNUIFSL / TURIF உடன் ஒப்பந்தம் செய்த பிறகு 02.11.09 அன்று பணியை தொடங்க வேண்டும் என்றும், பணி சம்மந்தமாக சமர்பிக்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் TURIF-ன் மூலம் கட்டண தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண். 70606/07/E 3, நாள்: 03.11.09-ல் தெரிவித்த படி கடந்த 12.11.09 அன்று மாநகராட்சி அலுவலகத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தகவல் தெரிவிக்கும் (Dissemination Meeting ) கூட்டத்தில் கலந்து கொண்ட TNUIFSL அலுவலர்கள் மூலம் கீழ்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ❖ மதுரை நகரில் பாதாள சாக்கடை திட்டம், இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் மற்றும் கேபிள் பதிப்பது போன்ற பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவது.
- ❖ இப்பணிக்கென ஆலோசராக நியமிக்கப்பட்ட M/s. Feedback Ventures (P) Ltd., நிறுவனத்தினர் எந்த சாலை, எந்த தெருவில் ஒரு நாளில் எத்தனை வாகனங்கள் செல்கின்றன என கணக்கிட்டும், மண் தன்மையை பரிசோதித்தும், சம்மந்தப்பட்ட சாலையை எந்த அளவிற்கு மேம்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அறிக்கை சமர்பிக்கும்.
- ❖ இவ்வறிக்கை அடிப்டையில் சர்வதேச தரத்தில் பலமான சாலை மழைக்கு அரிப்பு ஏற்படாத வண்ணம் நவீன தொழில்நுட்ப முறையில் அமைக்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு TURIF திட்டம் தொடர்பான அரசாணை மற்றும் அரசு கடிதங்களும் மேலும் திட்ட செயல்பாடுகள் குறித்த தகவல்களை மாமன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.819**
**பதிவு செய்யப்பட்டது.**

**9 ) ந.பொ.1 (ம.வ.3) /38554/08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் விபத்துக்கள்ளாவதை தவிர்க்கும்பொருட்டு நகரிலுள்ள முக்கிய சாலைகளின் மையத்தில் தடுப்புச்சுவர் கட்ட திட்டமிடப்பட்டது. கோரிப்பாளையம், சிம்மக்கல், தெற்குவாசல், பாலம் ஸ்டேசன் ரோடு, பனகல் ரோடு, கே.கே.நகர், அண்ணாநகர், எஸ்.எஸ்.காலனி மற்றும் பைபாஸ் சாலை போன்ற முக்கிய சாலைகளின் நடுவே நவீன முறையில் பசுமையுடன் கூடிய வகையில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு உத்தேச திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.00 கோடிக்கு மேலாகும் என கண்டறியப்பட்டது. தற்போது மாநகராட்சியில் உள்ள நிதி நிலைமையில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்வது

சாத்தியமாகாது. எனவே தனியார் நிறுவன பங்களிப்பு மூலம் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கை தொடர்ந்து விளம்பர நிறுவனங்கள் மூலம் சாலையின் மையத்தில் தடுப்புச்சுவர் கட்டும் பணியை மேற்கொள்ள நிர்வாக அளவில் முடிவுசெய்யப்பட்டது. வான்டேஜ் அட்வர்டைஸிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் மாநகராட்சியில் சமர்ப்பித்த 08.07.2008–ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட முக்கிய சாலையின் நடுவே BOT முறையில் சிமெண்ட கற்களிலான தடுப்புச்சுவர் அமைத்து ஷ தடுப்புச் சுவர்களின் மத்தியில் புல்வெளிகள் உருவாக்கி பசுமையான வண்ணத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு பத்து மீட்டர் இடைவெளியில் மின்விளக்கு வசதிகளுடன் கூடிய 2.5" X 4.0" என்ற அளவில் விளம்பர பலகைகள் அமைத்து கொள்வதற்கும் மேலும் ஷ சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மைய தடுப்புச் சுவர்களில் ஒவ்வொரு 30 மீட்டர் இடைவெளியிலும் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு மின்கம்பங்கள் அமைத்து அதன் இருபக்கமும் அலங்கார விளக்குகள் அமைப்பதற்கும் அதற்கு ஈடாக மதுரை நகரிலுள்ள 10 பாலங்களில் அமைந்துள்ள தெருவிளக்கு மின்கம்பங்களில் 1.83 மீ X 1.00 மீ என்ற அளவில் இருபக்கமும் தெரியக்கூடிய வகையில் விளம்பர பலகைகள் அமைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கும் படியும் இவ்வனுமதி தொடர்பாக ஆக்கிரமிப்பு வரி மற்றும் விளம்பர வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து ஷ பணி ஆரம்பித்து முடிவுற்ற நாளிலிருந்து 15 வருடங்களுக்கு பராமரித்துக்கொள்வதற்கு அனுமதி வழங்கும் படியும் கோரப்பட்டது

| வ.எண். | சாலைகளின் பெயர் | உத்தேசிக்கப்பட்ட நீளம் (மீட்டரில்) |
|---|---|---|
| 1. | கே.கே.நகர் ஆர்ச் முதல் ஆவின் சந்திப்பு வரை | 1100.00 |
| 2. | ஆவின் சந்திப்பு முதல் குருவிக்காரன் சாலை பாலம் வரை | 650.00 |
| 3. | கோரிப்பாளையம் தேவர் சிலைமுதல் அண்ணா பேருந்து நிலையம் வரை | 1200.00 |

மேற்கண்டவாறு அனுமதி கோரப்பட்டுள்ள சாலைகளின் நடுவே உத்தேச நீளம் 3000 மீட்டருக்கு தடுப்புச்சுவர் அமைத்து பராமரிப்பதற்கும் இரண்டு அலங்கார விளக்குகளுடன் கூடிய புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் 81 எண்ணிக்கையில் அமைப்பதற்காகும் உத்தேச செலவு ரூ.1.00 கோடியை M/s. வான்டேஜ் நிறுவனத்தின் சொந்த செலவிலேயே மேற்கொள்வதை கருத்தில் கொண்டும் மேலும் சாலைகளின் நடுவே தடுப்புச்சுவர் அமைக்கும் பட்சத்தில் வாகனப் போக்குவரத்திற்கு மிகவும் எளிதாக இருக்கும் என்பதையும், வாகன விபத்துக்களினால் ஏற்படும் பொதுமக்களின் உயிர் இழப்பை தடுக்க இயலும் என்பதையும், கருத்தில் கொண்டு BOT (கட்டுதல் - இயக்குதல் - மாற்றுதல் ) (Built – Operate –Transfer- Bot)முறையில் ஷ சாலைகளின் நடுவே M/s. வான்டேஜ் தெரிவித்துள்ள தொழில் நுட்ப அடிப்படையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் கட்டப்படவுள்ள தடுப்புச் சுவரின் ஒவ்வொரு 30மீ இடைவெளியிலும் இரண்டு 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் ISI தரம் வாய்ந்த புதிய தெருவிளக்கு மின்கம்பங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கலாம் என விளம்பர குழுவில் 05.11.08 அன்று தீர்மானிக்கப்பட்ட பிறகு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதலுடன் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட பிறகு வான்டேஜ் நிறுவனத்தினர் பனகல் சாலையில் மைய தடுப்புச் சுவர் கட்டும் பணியை ஆரம்பித்து 75% முடிவுற்ற நிலையில் பொதுமக்கள் மற்றும் அரசு மருத்துவமனை அமைந்துள்ள சாலையின் மையத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பட்சத்தில் அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு செல்லும் பொதுமக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு ஷ பனகல் சாலையில் தடுப்புச் சுவர் கட்டிக் கொள்ள வழங்கப்பட்ட அனுமதி மட்டும் மாநகராட்சியால் ரத்து செய்யப்பட்டு கட்டப்பட்ட தடுப்புச் சுவர் முழுவதும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

இவ்வாறு அனுமதி வழங்கி பணிகள் ஆரம்பித்து முடிவுறும் நிலையில் ரத்து செய்யப்பட்டதால் M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு ரூ.25.00 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்து ஷ நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் கீழ்க்கண்ட சாலையின் மையப்பகுதி மற்றும் பாலத்திலுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களில் விளம்பரம் (Kiosks) செய்து கொள்ள அனுமதி வழங்கும் படி கோரப்பட்டுள்ளது.

1) அண்ணாநகர் P.T.R. பாலம் முதல் மேலூர் சந்திப்பு வரை
2) ராஜா மில் சாலை பாலம் (பாலம் ஸ்டேசன் சாலையை இணைக்கும் பாலம்)
   மேலும் கீழ்க்கண்ட சாலைகளின் மையத்தில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் (Octagonal Pdes) அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1) மேலவெளிவீதி, பெரியார் பேருந்து நிலையம் முதல் தலைமை தபால் அலுவலகம் வரை (15 Nos.)

2) வடக்கு வெளி வீதி, சேதுபதி பள்ளி முதல் சிம்மக்கல் மின்வாரிய அலுவலகம் வரை (15 Nos.)

கீழ்க்கண்ட சாலைகளின் ஓரத்தில் (இருபுறமும்) புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1) கீழவெளிவீதி (30 Nos.)

2) தெற்கு வெளி வீதி (60 Nos.)

M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு சாலைகளின் நடுவே மைய தடுப்பு சுவர் கட்டி அலங்கார விளக்குகள் அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பும், தற்போது ஏற்கனவே உள்ள தெருவிளக்கு மின்கம்பங்களிலும் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களிலும் Kisoks விளம்பரம் செய்து கொள்ள அனுமதி வழங்குவதற்கும் மேற்கண்ட பணியினை M/s. வான்டேஜ் நிறுவனத்தினர் தங்களது சொந்த செலவில் மேற்கொள்வதால் விளம்பரம் கட்டணம் செலுத்துவதிலிருந்து 15 வருடம் விலக்களிப்பதற்கு முதற்கட்டமாக 5 வருடத்திற்கு விலக்களித்து அவருடைய பராமரிப்பு பணி திருப்பதிகரமாக இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து ஒவ்வொரு 5 வருடத்திற்கும் அனுமதியை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.820**
**ஒத்தி வைக்கப்பட்டது.**

**10) ம.பொ. 7/ ம.எண். 263/09-10**

மதுரை மாநகராட்சியில் பகுதி II திட்டத்தின் கீழ் மண் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றுவதற்கு அரசாணை எண். 135, ந.நி. (ம) கு.வ. துறை, நாள். 30.07.2009 ன் கீழ் ரூ. 50.00 இலட்சம் மானியமாக மதுரை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் படி கீழ்க்கண்ட மதிப்பீடுகள் இப்பணிக்கென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டு எண் & பணியின் விபரம் | நீளம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | ம.பொ. 7/ம.எண். 263/ 09-10 வார்டு எண். 42, செட்டியார் லைன், காஜா தெருக்களில் மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 290.00 | 10.00 | |
| 2. | ம.பொ. 7/ம.எண். 254/ 09-10 வார்டு எண். 64, சீனிவாசன் தெருவில் மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 465.00 | 7.60 | |
| 3. | ம.பொ. 7/ம.எண். 251/ 09-10 வார்டு எண். 68, பசும்பொன் நகர், திருவள்ளுவர் தெருக்களில் மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 290.00 | 9.98 | |
| 4. | ம.பொ. 7/ம.எண். 308/ 09-10 வார்டு எண். 68, மணிகண்டன் தெருவில் மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 300.00 | 9.98 | |
| 5. | ம.பொ. 7/ம.எண். 309/ 09-10 வார்டு எண். 68, நேரு நகர், திலகர் நகர் குறுக்குத் தெருக்களில் மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 285.00 | 9.98 | |
| 6. | ம.பொ. 7/ம.எண். 358/ 09-10 வார்டு எண். 68, மருதுபாண்டியர் நகர் மற்றும் குறுக்குத் தெருக்களில் மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 150.00 | 8.00 | |
| 7. | ம.பொ. 3/ம.எண். 349/ 09-10 வார்டு எண். 2, தபால் தந்தி நகர் 1வது, 2வது, 3வது தெருக்களில் மண் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | 400.00 | 9.95 | |
| 8. | ம.பொ. 7/ம.எண். 366/ 09-10 வார்டு எண். 68, நேரு நகர் 1வது மற்றும் 2வது குறுக்குத் தெருக்களில் மண் சாலையை | 300.00 | 15.00 | |

| வ. எண். | மதிப்பீட்டு எண் & பணியின் விபரம் | நீளம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| | சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுதல் | | | |
| 9. | ம.பொ. 7/ம.எண். 283/ 09-10<br>வார்டு எண். 2, தபால் தந்தி நகர் 3வது தெருவில் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 200.00 | 6.50 | |
| 10. | ம.பொ. 7/ம.எண். 282/ 09-10<br>வார்டு எண். 2, தபால் தந்தி நகர் 1,2, 3வது தெரு மற்றும் 3வது குறுக்குத் தெருக்களில் மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல் | 200.00 | 6.50 | |
| | **மொத்தம்** | **2880.00** | **93.49** | |

மேற்கண்ட மதிப்பீடுகளுக்கு உரிய தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஒப்புதலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.821**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 27.11.2009**

* * * * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2009ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ம் நாள் வெள்ளி கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1) மரு6/33633/04</u>**

மதுரை மாநகராட்சி மருந்தகம், மகப்பேறுமனை மற்றும் நலவாழ்வு மையங்களின் பாதுகாப்பு பணிக்காக தினக்கூலி அடிப்படையில் 14 (பதினான்கு) காவலர்கள் சப்ளை செய்ய 18.09.09 ஒப்பந்தப் புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | கம்பெனியின் பெயர் | தினக்கூலி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி<br>12C, திருவாப்புடையார் கோவில் சன்னதி தெரு, செல்லூர், மதுரை–2. | ரூ.115/-(ரூபாய் நூற்றி பதினைந்து மட்டும்) |
| 2 | பிஸ்மி சோசியல் சர்வீஸ் சொசைட்டி<br>4B, சுபைதார் தோப்பு, மதுரை | ரூ.130/- (ரூபாய் நூற்றி முப்பது மட்டும்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதமான தினக்கூலி ரூ.115/- கொடுத்துள்ள குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தாரை விலை குறைப்பு செய்ய கோரியதன் பேரில் தினக்கூலி ரூ.105/- அடிப்படையில் சப்ளை செய்ய குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தார் அளித்த சம்மதித்தனை ஏற்று 01.10.2009 முதல் 30.09.2010 வரை மருந்தகம், மகப்பேறுமனை மற்றும் நலவாழ்வு மையங்களின் பாதுகாப்பு பணிக்காக தினக்கூலி அடிப்படையில் 14 (பதினான்கு) காவலர்கள் சப்ளை செய்ய உத்தரவிட்டதற்க்கும் அதற்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்.822</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**<u>2) மரு1/மரு6/14006/06</u>**

மதுரை மாநகராட்சி மருந்தகங்களில் காலியாகவுள்ள கூட்டுபவர் மற்றும் தண்ணீர் எடுப்பவர் காலி பணியிடங்களுக்கு தினக்கூலி அடிப்படையில் 9 (ஒன்பது) கூட்டுபவர் மற்றும் தண்ணீர் எடுக்கும் பணியாளர்கள் சப்ளை செய்ய 18.09.09 ஒப்பந்தப் புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | கம்பெனியின் பெயர் | தினக்கூலி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி<br>12C, திருவாப்புடையார் கோவில் சன்னதி தெரு, செல்லூர், மதுரை–2. | ரூ.115/-(ரூபாய் நூற்றி பதினைந்து மட்டும்) |
| 2 | Integrated Service Centre<br>No.1, BalaNagammal Kovil St., Bykara, Madurai- 4. | ரூ.125/- (ரூபாய் நூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதமான தினக்கூலி ரூ.115/- கொடுத்துள்ள குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தாரை விலை குறைப்பு செய்ய கோரியதன் பேரில் தினக்கூலி ரூ.105/- அடிப்படையில் சப்ளை செய்ய குவாலிட்டி சர்வீஸ்

சொசைட்டி நிறுவனத்தார் அளித்த சம்மதித்தனை ஏற்று 01.10.2009 முதல் 30.09.2010 வரை மருந்தகங்களுக்கு 9 கூட்டுபவர் மற்றும் தண்ணீர் எடுக்கும் பணியாளர்கள் சப்ளை செய்ய உத்தரவிட்டதற்க்கும் அதற்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.823</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

## 3 ) மந2/மந6/13911/05

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டல வளாகம் மற்றும் புதூரில் அமைந்துள்ள 24 மணி நேர மாநகராட்சிக்கு மருத்துவமனைக்கு 10 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 4 காவலர்கள் (இரவு மற்றும் பகல் சேர்த்து) சப்ளை செய்ய 18.09.09 ஒப்பந்தப் புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | கம்பெனியின் பெயர் | தினக்கூலி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி<br>12C, திருவாப்புடையார் கோவில் சன்னதி தெரு, செல்லூர், மதுரை–2. | ரூ.115/-(ரூபாய் நூற்றி பதினைந்து மட்டும்) |
| 2 | பிஸ்மி சோசியல் சர்வீஸ் சொசைட்டி<br>4B, சுபைதார் தோப்பு, மதுரை | ரூ.122/- (ரூபாய் நூற்றி இருபத்தி இரண்டு மட்டும்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதமான தினக்கூலி ரூ.115/- கொடுத்துள்ள குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தாரை விலை குறைப்பு செய்ய கோரியதன் பேரில் தினக்கூலி ரூ.105/- அடிப்படையில் சப்ளை செய்ய குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தார் அளித்த சம்மதித்தனை ஏற்று 01.10.2009 முதல் 30.09.2010 வரை 24 மணி நேர மாநகராட்சிக்கு மருத்துவமனைக்கு 10 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 4 காவலர்கள் (இரவு மற்றும் பகல் சேர்த்து ) சப்ளை செய்ய உத்தரவிட்டதற்க்கும் அதற்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.824</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

## 4 ) மந2/மந6/6561/03

மதுரை மாநகராட்சி மகப்பேறுமனைகளில் காலியாகவுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கு தினக்கூலி அடிப்படையில் 14 (பதினான்கு) துப்புரவு பணியாளர்கள் சப்ளை செய்ய 18.09.09 ஒப்பந்தப் புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | கம்பெனியின் பெயர் | தினக்கூலி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி<br>12C, திருவாப்புடையார் கோவில் சன்னதி தெரு, செல்லூர், மதுரை–2. | ரூ.115/-(ரூபாய் நூற்றி பதினைந்து மட்டும்) |
| 2. | Integrated Service Centre<br>No.1, BalaNagammal Kovil St., Bykara, Madurai- 4. | ரூ.120/- (ரூபாய் நூற்றி இருபது மட்டும்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதமான தினக்கூலி ரூ.115/- கொடுத்துள்ள குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தாரை விலை குறைப்பு செய்ய கோரியதன் பேரில் தினக்கூலி ரூ.105/- அடிப்படையில் சப்ளை செய்ய குவாலிட்டி சர்வீஸ் சொசைட்டி நிறுவனத்தார் அளித்த சம்மதித்தனை ஏற்று 01.10.2009 முதல் 30.09.2010 வரை மகப்பேறுமனைகளில் காலியாகவுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கு தினக்கூலி அடிப்படையில் 14 (பதினான்கு) துப்புரவு பணியாளர்கள் சப்ளை செய்ய உத்தரவிட்டதற்க்கும், அதற்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.825</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**5 ) மபொ.7./21043/09**

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு 39ல் உள்ள சின்னக்கடை வீதியில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலான அருள்மிகு ஸ்ரீ தசகாளியம்மன் திருக்கோயில் இலவச குடிநீர் வழங்கக் கோரிய 39வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்கனவே நடப்பில் உள்ள மாநகராட்சி திர்மானம் எண்:16 கோப்பு எண் கி.ம.பொ.3/00731/2009 நாள்: 24.09.2009-ன் அதன் அடிப்படையில் மேற்கண்ட கோவிலுக்கு இலவச குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.**826
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6 ) Jn.S1/3178/09**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சாலை போக்குவரத்திற்கென விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (Comprehensive Mobility Plan). நகரின் மையப்பகுதியில் ஏற்படும் வாகன நெரிசலை குறைப்பதற்காக சுற்றுச்சாலையை அகலப்படுத்த வேண்டுமென அறிக்கை வழங்கியுள்ளது. அதனடிப்படையில் M/s.STUP நிறுவனத்தார் சுற்றுச் சாலையை அகலப்படுத்த திட்ட அறிக்கை தயாரித்துள்ளனர். மாமன்ற தீர்மான எண்.803 நாள்:28.10.2009ல் சுற்றுச்சாலையை அகலப்படுத்த தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் புதியதாக நான்கு வழிச்சாலை அமைத்து வருகின்றது. இச்சாலை சுற்றுச்சாலையின் 2/0கி.மீ—ல் இணைக்கின்றது. திருச்சியிலிருந்து வரும் நான்கு வழிச்சாலை சுற்றுச்சாலை 2/0கி.மீ—ல் இணைவதால் 0/0கிமீ முதல் 2/00 கி.மீ—ல் வரை உள்ள சுற்றுச்சாலையை அகலப்படுத்த தற்பொழுது தேவையில்லை. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினமும் தவிர்க்கப்படும். எனவே மேற்படி தீர்மானத்தில் சுற்றுச்சாலையில் 0/00கி.மீ முதல் 2/00கி.மீ. வரை உள்ள பகுதியில் நில ஆர்ஜிதம் செய்ய நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இப்பகுதியை (உத்தங்குடி SF No. 141, 146, 148, to 157, 161 to 164 மற்றும் 166: இளையான்குளம் SF No.1 மற்றும் மேலமடை பகுதி) நீக்கம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.**827
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7 ) ந.பொ.1./27662/09**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்குரிய நடைமுறைகள் பற்றிய விவரங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 748/08 குவ 2, நாள். 21.09.09 மாமன்றத்தின் பார்வைக்கும் உரிய ஒப்புதலுக்கும் வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.**828
**பதிவு செய்யப்பட்டு குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8 ) ம.பொ.3/ம.எண்.504/09-10**

